# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




visit us: www.pallavipathippakam.in | DOAJ Google

முனைவர் சு. சத்யா

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.


**சிறப்பாசிரியர்**
**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**ஆசிரியர்**
**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**
**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்**
**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**பதிப்பாசிரியர்**
**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.






**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

## பல்லவி பதிப்பகம்

194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி - | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் - | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி - | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு - | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி - | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் - | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு - | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து - | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் - | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு - | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு - | G.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் - | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் - | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் - | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை - | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் - | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் - | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின்' சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து - | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை; திருக்குறளும் இன்னிலையும் - | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் - | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் - | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பிரம்) - | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் - | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு - | திரு.செல்லத்துரைசுதர்சன் முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |

# பக்தியில் ஆண்டாளும் மீராவும்

முனைவர்.க.மீரா
தமிழ்த்துறைத் தலைவர்,
பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

பல்லவர் காலத் தமிழகம் பக்திமாண்போடு திகழ்ந்தது. சைவத்தை நாயன்மார்களும், வைணவத்தை ஆழ்வார்களும் பக்தியோடு பாடிப்பரவி தத்தம் சமயத்தை வளர்த்தனர். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரமே நாலாயிர திவ்ய பிரபந்தமாகும். பன்னிரு ஆழ்வார்களுள் பெண் என்று போற்றப்படும் பெருமைக்குரியவர் ஆண்டாள். தமிழகத்தில் வாழ்ந்த ஆண்டாளும் வடநாட்டில் வாழ்ந்த மீராபாயும் கண்ணபெருமானை வழிபடுவதில் பெரு விருப்புடையவர்களாயினா. இவ்விருவரின் பக்தி மாண்பினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிறப்பும் வளர்ப்பும்**

திவ்யதேசங்கள் 108 னுள் வைணவ திருத்தலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரே ஆண்டாள் பிறந்து பெருமைபெற்ற ஊராகும். ஆவ்வூரில் கி.பி 8ஆம் நூற்றாண்டில் வசித்து வந்த விஷ்ணுசித்தர் இறைவனுக்குத் திருத்துழாய் மாலை சூட்டி வழிபடுவதை தன் அன்றாட கடமையாகக் கொண்டிருந்தார். வழக்கம்போல் நந்தவனம் சென்று மலர்க்கொய்ய முயல்கையில் துழாய்ச்செடியின் கீழ் ஒருபெண் குழந்தை கிடப்பதைக் கண்டெடுத்து அதனை இறைவன் வழங்கிய அருட்கொடையாகக் கருதி அக்குழந்தைக்குக் கோதை எனப்பெயர் சூட்டி வளர்த்து வந்தார்.

மீராபாய் கி.பி 14ஆம் நூற்றாண்டில் வைணவ உலகமான வடஇந்திய ராஜஸ்தானில் ராஜபுத்திர இளவரசியாக ரத்தன்சிங் வீரகுமாரி தம்பதிகளுக்கு மகளாளகத் தோன்றிய கிருஷ்ணபக்தை ஆவார். ஏழுவயதில் தன் பெற்றோரை இழந்து பாட்டனாரால் வளர்க்கப்பட்டு கல்வியும் கற்றார்.

**இளமைப்பருவம்**

கோதை தன் இளம் வயதில் தமிழ் மற்றும் சமயம் தொடர்பான அனைத்தையும் கற்றுத்தேர்ந்து கண்ணன் மீதுபக்திக் கொண்டவராகவும் தமிழில் நல்ல தேர்ச்சிபெற்றவராகவும் திகழ்ந்தார்.சிறுவயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற பக்தி காரணமாக அவனே 'தன் மணாளன்' என்ற எண்ணத்தை வளர்த்துக்கொண்டு நிறைய பக்தி பாடல்களைப் பாடுகிறார். பலமுறை தன்னைக் கண்ணனின் மணாளத்தியாக நினைத்துக்கொண்டே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தன் பருவ வயதை எட்டினார்.

குழந்தை பருவத்திலிருந்தே கிருஸ்ணரை வழிபடக்கற்றுக் கொண்ட மீராவின் உள்ளத்தில் மத உணர்வுகள் மிளிரத்தொடங்கியது. மீரா

மூன்று வயதாக இருக்கும்பொழுது அவளது வீட்டு முன்பாக ஒருதிருமண ஊர்வலம் சென்றது.அது என்ன? என்று தாயிடம் வினவ "நாளைக்குத் திருமணம். மாப்பிள்ளை ஊர்வலம் போகிறது"என்றாள்.மீராவோ,அப்படியென்றால் 'எனக்கு மாப்பிள்ளை' யார்?என்று வினவ, தாளானவள் வேடிக்கையாக கிருஸ்ணபொம்மையைக் காட்டி, "இவர்தானம்மா உன் கணவர். இவர் மதுரா பிருந்தாவனத்தில் இருக்கிறார்"என்று அறிமுகப்படுத்த அவை பிஞ்சு மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அன்று முதல் கண்ணனையே மணவாளனாக நினைக்கத் தொடங்கினார்.

### மாலைசூட்டியதும் பாலூட்டியதும்

கண்ணனின் மனப்பெண்ணாக நினைத்துவந்த கோதை, தன் தந்தை இறைவனுக்குத் தொடுத்து வைத்த மாலையை அவருக்குத் தெரியாமல் தினமும் தான் அணிந்து கொண்டு கண்ணனுக்கு ஏற்றவளாக இருக்கிறோமா எனக் கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து, பின்னர் அதனைக் கழற்றி வைக்கிறாள். இதனால் கோதை சூடிய மாலையே ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு சூட்டப்பட்டன.

மீரா, தன்தாய் அறிமுகப்படுத்திய நாள் முதலாக கிருஸ்ணபொம்மையைக் குளிப்பாட்டுவதும், அலங்கரிப்பதும் அதனோடு பேசுவதும்,விளையாடுவதும் தூங்குவதும், வணங்குவதும், ஆடிப்பாடுவதுமாக பெரும்பாலான நேரத்தை செலவிட்டாள். அப்பொம்மையோடு நடனமாடி கிருஷ்ணப்பாடல்களைப் பாடவும் தொடங்கினாள். அரண்மனைக்கு எதிரில் கிருஸ்ணர் கோவிலில் உள்ள கண்ணனைத் கன் கணவனாக எண்ணினாள். தனக்குக் கொடுத்த பாலை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்று "கண்ணா பால் சாப்பிடு" எனக் கொடுக்கிறாள். கோதை சூட்டிய மாலையை இறைவன் ஏற்றுக்கொண்டது போல, இங்கு சுயவடிவில் தோன்றிய கண்ணன் பாதிப்பாலை அருந்திவிட்டு மீதிப்பாலை மீராவுக்குக் கொடுக்க அவள் அதனைப்பருகி மகிழ்ந்தாள்.

### மறுஅவதாரம்

திருத்துழாய்க் காட்டில் கண்டெடுக்கப்பட்ட கோதை பூமிபிராட்டியின் அவதாரமாகக் கருதப்படுகிறாள்.

கண்ணனின் ராதைக்கு லலிதா, விசாகா, சித்ரா, சம்பகலதா, சந்திரலேகா, ரங்கா,ஸ்ரீதேவி, துங்கவித்யா என்ற உன்னதமான தோழியர் இருந்தனர்.அவர்களுள் ஒருவரான சந்திரலேகா என்றவளின் மறுஅவதாரமே மீரா என்று கூறுவர்.ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குக் கோவில் உள்ளது போல மீராவுக்கும் கோவில் உண்டு. ராதாவின் வடிவமாகவும் மீரா போற்றப்படுகிறாள்.ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் கோவில் உள்ளது போல் வடநாட்டில் மீராவுக்கும் கோவில்இருப்பதாக வரலாறு

### மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்

கோதை மணவயதை அடைந்ததும் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் அவளோ "தேவர்களுக்காக அந்தணர் இட்ட யாக உணவை நரி எடுத்துஉண்பது எங்ஙனம் தகாதோ அதுபோல யானும் திருமாலுக்கன்றி மனிதனுக்கு வாழ்க்கைப்படமாட்டேன் . மனிதனை மணந்துகொள் என்ற பேச்சு ஏற்பட்டாலே உயிர்வாழ மாட்டேன்" என்று மறுத்துரைத்து திருவரங்க கோவிலில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தாள் (நா.திருமொழி.508).

பருவ வயதை எட்டிய மீராவுக்கும் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. மீராவோ கண்ணனே தன் கணவன் என்றாள். கண்ணனிடமும் இதனை முறையிட்டாள்.அன்றிரவு மீராவின் கனவில் தோன்றிய கண்ணன் 'உன் அந்தரங்க பக்தியை மெச்சினேன்.இல்லத்தவரின் விருப்பம் போல் மணந்துகொள்' என்று கூறியிருக்கிறான்.இளவரசன் போஜராஜனுக்கும் மீராவுக்கும் திருமணம் நடந்தேறியது. கண்ணன் மீது கொண்ட பக்தியால் போஜனைக் கண்ணனாகவே பாவித்தாள். புகுந்தவீடு சென்றதும் அவர்களின் குலதெய்வமான துர்க்கையை வழிபடவில்லை. கிரிதரகோபாலனைத் தவிர எனக்கு வேறுயாருமில்லை என்கிறாள். திருமணமாகி தன் கணவனுடன் இன்பத்தில் ஈடுபடவில்லை.ஆனால் அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாள். குடும்பத்தாரிடம் இதமாகப் பழகினாள். மற்ற நேரங்களில் கண்ண வழிபாட்டிலும் ஆடல் பாடல்களில் நேரத்தைச் செலவிட்டாள். ஊலக உண்மை, குடும்ப நிர்பந்தம் புகழ் போன்ற எவற்றையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. கண்ணனைக் காணஇயலாத மனித வாழ்க்கைக்கு வர மீரா விரும்பவில்லை. கண்ணன் தன்னுடன் எப்போதும் இருக்கவேண்டுமென விரும்பினாள்(சம்பூர்ணசநித்யம்). 'சகா ராகோ ஜி'என்ற தனது பஜனைப் பாடலில் கண்ணனிடம் தன்னை ஒரு கணிப்பெண்ணாகச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறாள். "கேசவா நம்பியைக் கால்பிடிப்பாள்" என்ற ஆண்டாள் பாசுரத்தை இங்கு நினைவு கூறலாம்.

### காணும் பொருளனைத்தும் கண்ணனே

'நோக்குவன யாவும் அவையே போதல்' என்றத் தொல்காப்பிய விதிக்கேற்ப ஆண்டாள் மீரா இருவருக்கும் காணும் பொருட்கள் அனைத்தும் கண்ணனாகவே தென்பட்டன. பாடுங்குயில்கள், கூட்டமாகவுள்ள மயில்கள்,மழை, மேகம், கடல் முதலானவற்றைக் காணும்போது ஆண்டாளிற்கு கண்ணபிரானைக் கண்ட உணர்வே மிகுகிறது(நா.திருமொழி.601-605).

மீராவின் பார்வையிலும் மரம்,கல்,பூ,பறவையென இவ்வுலகிலுள்ளஅனைத்தும் கிருஸ்ணனாகவே தென்பட்டன. அதோடு நில்லாமல் கிருஸ்ணனின் சிலை

உயிர்ப்பெற்று குழலூதி தன்னுடன் பேசுவதாகவும் நடனமாடுவதாகவும் உணர்கிறார்.இவ்வுயிரினங்கள் எல்லாம் நிலைபெற்றிருக்கும் வரை இவ்விரு பக்தைகளின் பெயரும் அவர் தம் பாடல்களும் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

### பிரிவுத்துயரும் தூதும்

பருவங்கண்டு புலம்புதல், நாணிழந்து வருந்துதல் போன்ற அகத்துறை நிகழ்வுகள் இருவரது வாழ்விலும் இடம்பெறுகின்றன. தலைவியைத் தலைவன் பிரியும்போது கைவளை நெகிழும், உறக்கமும் சிந்தையும் அவளை விட்டு நீங்கும். அச்சமயம் தூதுவிடும் நிகழ்ச்சி நடைபெறும். இங்கு மதுசூதனன் வந்து தன் கைத்தலம் பற்றக் கனவு கண்ட நாச்சியார் தாம் கொண்ட பேரின்பமாகிய பக்திப்பெருக்கத்தை கண்ணனிடம் தெரிவிக்க மேகத்தையும் குயிலையும் தூது விடுகிறார்(நா.திருமொழி. 5,8,579).

மீராபாயும் கண்ணனிடம் தூது விடுகிறார். "ஹரி அவன் கி அவாஸ்"என்ற பஜனைப் பாடலில், கருநீல மேகங்கள் வான்வெளியில் பறந்து திரியும் கார்காலத்தில் தேவதைகள் பாட்டிசைக்க, அதற்கேற்ப கானமயில்கள் நடனமாடுகின்றன. ஆனால் தான் மட்டும் இறைவனைப் பிரிந்து வாடுவதாகவும், தன்மீது அன்பைப் பொழிந்து புதுவாழ்வு தருமாறும், இறைவனிடத்தில் சரணாகதி அடையவேண்டும் என்றும் புலம்புகிறார். இதனைக் கண்ணனிடம் சொல்லுமாறு வருணனைத் தூது விடுகிறாள். சூரியனின் வெப்பந்தாங்காமல் அழியும் புல் பூண்டுகளை மழைவந்து காப்பது போல தன்னையும் இறைவன் வந்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென பிராத்திக்கிறார்.

### கோபியராக நினைத்தல்

திருப்பாவையில் ஆண்டாள் தன்னை கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி கோபிகையாக நினைத்துக் கொண்டு பல பக்தி பாசுரங்களைப் பாடி பெருமை கொள்கிறார்.

இறைவனை பிராத்திப்பதில் தன் குடும்பத்தாரால் பல இன்னல்களை சந்தித்த மீராபாய் வீட்டைவிட்டு வெளியேறி கண்ணன் வாழ்ந்த பிருந்தாவனத்தை வந்தடைந்து அங்கு தன்னை கோபியர்களில் ஒருவராக உணர்ந்தார். வடஇந்தியா முழுவதும் சென்று இறைப்பாடல்களைப் பாடி பக்தியைப் பரப்பினார்.

### பாடலளவும் சிறப்பும்

ஆண்டாள் திருப்பாவை(30), நாச்சியார் திருமொழி(143)இரண்டிலுமாக மொத்தம் 173 பாடல்களைக் கொண்டது. இறைவனை வேண்டி பாவை நோன்பிருந்தால் மழைபெய்யும். நல்ல கணவனை அடையலாம் எனும் பொருள்பட திருப்பாவையிலும், இறைவனுக்கும் தனக்கும் திருமணம் நடப்பது போன்று அவர் காணும் கனவுகளாக நாச்சியார் திருமொழியிலும் பாடியுள்ளார்.

மீராபாய் 1300பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார்.வாழ்க்கைச் சுமையைத் தூக்கிச் சோர்ந்து போனவர்க்கு அவரது அயர்வைப் போக்குவதாக மீராவின் பாடல்கள் அமைந்துள்ளது. இவரின் பாடலைக் கேட்ட முகலாய அக்பர் முத்துமாலையைப் பரிசாக வழங்கினார்.பிறப்பால் எவரும் உயர்ந்தவர் இல்லை, எளிய பக்தியும் நம்பிக்கையுமே வீடுபேற்றை அடையும் வழி என்ற கருத்துகளை உள்ளடக்கியதாகவும், காயப்பட்ட இதயத்திற்கு ஆறுதல் தருவதாகவும் அமைகிறது.

### இறைவனோடு இரண்டறக்கலத்தல்

தமிழ்நாட்டு ஆண்டாளுக்கும் ராஜபுதனத்து மீராவுக்கும் வாழ்வின் நோக்கம் ஒன்றாகவே இருந்தது. கண்ணனையே கணவனாக நினைத்த மாமங்கையர்கள் இவ்விருவம். ஆண்டாள் அரங்கன் மீது கொண்ட காதல் தமிழ்நாட்டு அகமரபுக் காதலாகும். ஆரங்கனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்த கோதையை நினைத்து கவலையடைந்த விஷ்ணுசித்தரின் கனவில் இறைவன் தோன்றினார். கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோவிலுக்கு அழைத்து வருமாறு கட்டளையிட, குறித்த நாளன்று கோவிலுக்கு அழைத்துச்செல்லப்பட்ட கோதை கருவறைக்குள் சென்று இறைவனோடு ஐக்கியமானாள்.இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு ஆண்டாளானார்.

மீரா புகுந்த வீட்டில் துர்க்கையை வழிபடாமல் கண்ணனை வழிபட்டதால் தன் கணவரின் தம்பி விக்ரமாதித்யாவாலும், சகோதரி உதாபாயாலும் பல இன்னல்களுக்கு ஆளானார். கண்ணனுக்குப் படைத்த பிரசாதத்தில் நஞ்சைக் கலந்து அதனை மீராவை உண்ணுமாறு செய்தனர். இறையருளால் நஞ்சு நீங்கியது. படுக்கையில் இரும்பு முட்களைப் பரப்ப அஃது ரோஜா இதழ்களாக மாறியது. கொடிய பாம்பு அடைத்த பூக்கூடையை கொடுத்து கண்ணனுக்கு அர்ப்பணிக்குமாறு கொடுக்க, அஃது பூமாலையாக மாறியது. தன் இறுதிக் காலத்தில் குஜராத்தின் துவாரகைக்கு வந்தடைந்த மீரா அங்கு கோயில்கொண்ட துவாரகதீசன் முன்பு பாடிக்கொண்டே அனைவரின் கண்ணெதிரிலேயே இறைவனோடு கலந்தாள்.

ஆண்டுகள் பல சென்றாலும் ஆண்டாளின் மார்கழி நாதமும், மீராவின் காற்றினிலே வரும் கீதமும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

துணைநூற்பட்டியல்

1.திருப்பாவை

2.நாச்சியார் திருமொழி

3.இணையதள செய்திகள்

ISSN : 2278-7550

2278-7550

பல்லவி பதிப்பகம்